தனிச்சுற்று
நுட்பியல் சார் வேளாண்மை இதழ்
www.agrisakthi.com
www.vivasayam.org
contact: 99407 64680
அக்ரி சக்தி
விவசாயிகளின் சக்தி
http://vivasayam.org | http://agrisakthi.com | email to : editor@agrisakthi.com

---

19.04.2022

பெருமதிப்புக்குரிய முதல்வர் அவர்களுக்கு

தமிழ்நாடு முழுதும் தற்போது பெய்து வெப்பச்சலனமழையால் ஆங்காங்கே நெல் விற்கும் மையங்களில் குவிந்துள்ள நெல் மழையில் நனைந்து வீணாகும் செய்திகளை தாங்கள் அறிவீர்கள். தமிழகம் முழுதும் பல்வேறு இடங்களில் இந்த நிலை நிலவிவருகிறது. எனவே தயை கூர்ந்து இந்த பிரச்னையை விரைவாக தீர்க்க நடவடிக்கை எடுக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்

ஆசிரியர்

அக்ரிசக்தி

News1

கொள்முதல் நிலையங்களில் மழையில் நனைந்து வீணாகிவரும் நெல் மூடைகள்

கொள்முதல் நிலையம்

விருதுநகர் மாவட்டம் நரிக்குடி பகுதியில் விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று பாப்பாங்குளம், பட்டமங்கலம், முள்ளிகுடி, நாலூர், உலக்குடி, பனைக்குடி,கே.நெடுங்குளம், இருஞ்சிறை உள்பட10-க்கும் மேற்பட்ட இடங்களில் அரசு நெல் கொள்முதல் நிலையம் ஆரம்பிக்கப்பட்டு பல ஆயிரம் மூடைகள் நெல் கொள்முதல் செய்யப்பட்டது. நெல் கொள்முதல் முடிந்து 20 நாட்கள் ஆகியும் நெல் மூடைகள் நுகர்பொருள் வாணிப கிடங்குக்கு

ஏற்றிச்செல்லப்படாததால் தற்போது பெய்து வரும் மழைக்கு நெல் மூடைகள் நனைந்து முளைத்துவிட்டன. அத்துடன் துர்நாற்றமும் வீச ◌ெதாடங்கிவிட்டது.

https://www.dailythanthi.com/News/Districts/2022/04/19003330/Purchasing-station.vpf?utm=thiral

------

News2

நெல் மூட்டைகள் விற்பனை செய்யாமல் கொள்முதல் நிலையத்தில் வைத்திருந்ததால் விவசாயிகள் சாலை மறியலில் ஈடுபட்டுள்ளனர்.

கடலூர் மாவட்டத்தில் உள்ள நாவலூர் உள்பட 5 பகுதிகளில் வசிக்கும் விவசாயிகள் தங்களது நிலத்தில் விளைந்த நெல்லை விற்பனைக்காக கொள்முதல் நிலையத்தில் ஒரு மாதமாக வைத்துள்ளனர். ஆனால் ஆட்கள் பற்றாக்குறை மற்றும் சாக்கு இல்லை எனக் கூறி அந்த நெல் மூட்டைகளை விற்பனை செய்யாமல் வைத்திருந்ததாக கூறப்படுகிறது. இந்நிலையில் தற்போது பெய்த கன மழையில் 5000 நெல் மூட்டைகள் நனைந்து சேதமடைந்ததுடன் நெல்மணிகள் முளைக்க தொடங்கியதாகக் கூறப்படுகிறது.

https://www.seithisolai.com/vivasaiyikal-salai-mariyal-porattam.php?utm=thiral

-----

News3

'அதிகாரிகள் கண்டுகொள்ளவில்லை, நெல்மூட்டைகள் மழையில் நனைந்து சேதம்' ... விவசாயிகள் சாலைமறியல்

கடலூர் - திட்டக்குடி அருகே நெல் கொள்முதல் நிலையத்தில், அதிகாரிகள் நெல்லை கொள்முதல் செய்யாமல் கிடப்பில் போடப்பட்டதால் 200 மூட்டைகள்

மழையில் நனைந்து சேதமானதாக 100க்கும் மேற்பட்ட விவசாயிகள் சாலைமறியலில் ஈடுபட்டனர்

https://tamil.news18.com/news/tamil-nadu/cuddalore-district-tn-farmers-protest-paddy-bundles-soaked-in-rain-damage-skv-732617.html

-------

news4

திறந்த வெளியில் நெல் மூட்டைகள்

திருவாரூர் மாவட்டம் கூத்தாநல்லூரை அடுத்த பழையனூர் கிராம நிர்வாக அலுவலகம் அருகே திறந்த வெளியில் அரசு நெல் கொள்முதல் நிலையம் இயங்கி வருகிறது. இங்கு பழையனூர், கானூர், சாத்தனூர், வேளுக்குடி, கோம்பூர் மற்றும் அதனை சுற்றி உள்ள கிராமங்களை சேர்ந்த விவசாயிகள் நெல்லை விற்பனை செய்து வருகிறார்கள்.

இங்கு கட்டிட வசதி இல்லாததால் நெல் மூட்டைகளை திறந்த வெளியில் அடுக்கி வைக்க வேண்டி உள்ளது. மழை பெய்யும்போது இங்கு உள்ள நெல் மூட்டைகள் நனைந்து நெல் மணிகள் வீணாவதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

https://www.dailythanthi.com/News/Districts/2022/04/17212709/farmers-upset.vpf?utm=thiral

--------

news5

கொள்முதல் செய்த நெல் மூடைகளை உடனே எடுத்துச்செல்ல வேண்டும்

[http://vivasayam.org](http://vivasayam.org) | [http://agrisakthi.com](http://agrisakthi.com) | email to : [editor@agrisakthi.com](mailto:editor@agrisakthi.com)

தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் மாவட்டகுழு சார்பில் மாநில துணைத்தலைவர் முத்துராமு மாவட்ட கலெக்டர் அனுப்பி உள்ள மனுவில் கூறியிருப்பதாவது:- ராமநாதபுரம் மாவட்டத்தில் 80 மையங்களில் நெல்கொள்முதல் செய்யப்படும் என அறிவிக்கப்பட்டது. ஆனால் தற்போது வரை 44 மையங்களில் மட்டுமே நெல்கொள்முதல் செய்யப் பட்டு வருகிறது. ஒருசில இடங்கள் தவிர்த்து முறைகேடுகள் தொடர்கிறது.

இதுவரை விவசாயிகளிடம் இருந்து 26 ஆயிரம் மெட்ரிக்டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டு உள்ளதாக தெரியவருகிறது. அனைத்து நெல் கொள்முதல் மையங்களிலும் வெட்ட வெளியில் கொள்முதல் செய்யப்பட்ட மூடைகள் அடுக்கி வைக்கப்பட்டு உள்ளது. இதனால் பாதுகாப்பற்ற நிலையில் கால் நடைகளுக்கு இரையாகி வருகிறது.

நெல் மூடைகள்

மேலும் நெல் மூடைகள் ஒரே இடத்தில் தேங்கி கிடப்பதால் போதிய இடவசதி மற்றும் பல்வேறு காரணங்கள் அடிப்படையில் விவசாயிகள் கொண்டு வரும் நெல் மூடைகளை கொள்முதல் செய்யப்படாமல் விவசாயிகள் பல நாட்கள் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டு உள்ளது.

இதனால் தற்போது வரைகொள்முதல் செய்யப்பட்டதில் சுமார் 19 ஆயிரம் மெட்ரிக் டன் நெல் மூடைகள் நெல் கொள்முதல் மையங்களில் தேங்கி உள்ளது.

[https://www.dailythanthi.com/News/Districts/2022/04/17221509/rice.vpf?utm=thiral](https://www.dailythanthi.com/News/Districts/2022/04/17221509/rice.vpf?utm=thiral)

தனிச்சுற்று
நுட்பியல் சார் வேளாண்மை இதழ்
www.agrisakthi.com
www.vivasayam.org
contact: 99407 64680
அக்ரி சக்தி
விவசாயிகளின் சக்தி

http://vivasayam.org | http://agrisakthi.com | email to : editor@agrisakthi.com

news collected by Thiral

திரள்

https://thiral.in